SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

விசுவாவசு வருடம் வைகாசி 4 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 துல்கதா 19

மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

/maalaiexpressnews

• புதுச்சேரி • ஞாயிற்றுக்கிழமை, மே 18, 2025 • வெளியூர்: 19-5-2025, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 302 • 8 பக்கம் • ரூ.6

## ஐதராபாத்தில் பயங்கர தீ விபத்து

# 17 பேர் உடல் கருகி பலி



## மருத்துவமனையில் பலருக்கு தீவிர சிகிச்சை

ஐதராபாத், மே 18-

ஆந்திர மாநிலத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சார்மினார் அருகே குசார் வீட்டில் இன்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டதாக காலை 6.30 மணியளவில் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புத்துறையினர் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும் இந்த தீயின் தாக்கத்தால் பலர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர். பின்னர் பலத்த காயமடைந்த 20க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலும் கட்டிடத்தில் சிக்கி உள்ள சிலரை மீட்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் முதற்கட்டமாக பெண்கள், குழந்தைகள் உள்பட 9 பேர் பரிதாபமாக தீயில் கருகி உயிரிழந்தனர். இதனையடுத்து தற்போது பலி எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் ஐதராபாத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் பலர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த தீ விபத்தால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### பிரதமர் மோடி நிவாரணம்

இந்த சம்பவம் குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐதராபாத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து கொள்கிறேன். இந்த சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது. தீ விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன். இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் ரூ.2 லட்சமும், காயம் அடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரணம் வழங்கப்படும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## பாகிஸ்தானுக்கு உளவாளியாக மாறிய பெண் யூடியூபர் உட்பட 6 பேர் கைது

புதுடெல்லி, மே 18-

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர் இதற்கு கடந்த 7ந் தேதி ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்து பதிலடி கொடுத்தது. இந்த தாக்குதலில் பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாதிகளின் முகாம்கள் அளிக்கப்பட்டன. இதையடுத்து இருநாடுகள் இடையே மோதல் அதிகரித்தது. பாகிஸ்தானும் இந்தியாவை தாக்க முயன்றது. அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டதோடு இந்தியா நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானின் விமானப்படை தளங்கள் அழிக்கப்பட்டன.

இதனையடுத்து, இருநாடுகளும் சண்டை நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டதை அடுத்து இரு நாட்டின் எல்லையில் தற்போது அமைதி நிலவி வருகிறது. இந்நிலையில் இந்தியாவில் இருந்து கொண்டு பாகிஸ்தானுக்கு உளவு தகவல்களை வழங்கியதாக பிரபல பெண் யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா, குசாலா, யமீன், தேவிந்தர், அர்மான் உள்பட 6 பேரை உளவுத்துறை அதிரடியாக கைது செய்துள்ளது.

ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர் ஜோதி மல்ஹோத்ரா (34). இவர் 'டிராவல் வித் ஜோ' என்ற பெயரில் யூடியூப் சேனலை நடத்தி வருகிறார். பிரபலமான இடங்கள் குறித்து இவரது யூடியூப் சேனலில் தகவல்களைப் பகிர்வதால் சமூக வலைதளத்தில் புகழ்பெற்றுள்ளார். கைதான இவர்கள் அனைவரும் பாகிஸ்தானுக்கு இந்தியாவின் ரகசிய தகவல்களை உளவு பார்த்து சொன்னதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஜோதி மல்ஹோத்ரா கடந்த 2023 ம் ஆண்டு கமிஷன் ஏஜெண்டு மூலம் விசா பெற்று பாகிஸ்தானுக்கு



சென்றுள்ளார். இவருக்கு டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் அதிகாரியாகப் பணியாற்றும் டேனிஸ் எனப்படும் எஹ்சான் உர் ரஹீம் என்பவருடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுள்ளது. இவர் பல பாகிஸ்தான் உளவுத்துறை நிறுவனங்களை, ஜோதிக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார். மேலும், ஜோதியும், டேனிஸும் மிக நெருக்கமாக பழகி வந்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், வாட்ஸ்அப், டெலிகிராம் உள்ளிட்ட செல்போன் செயலிகள் மூலம் பாகிஸ்தானியருடன் ஜோதி தொடர்பில் இருந்து வந்துள்ளார். இந்திய பகுதிகள் குறித்த ரகசியங்களை அவர்களுக்கு பகிர்ந்து வந்ததுடன், சமூக வலைதளங்களில் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வந்துள்ளார். இவர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டு விசாரணை வளையத்தில் உள்ளனர். மேலும், பாகிஸ்தானுக்கு முகவர்களாகவும், ரகசியங்களை கொடுப்பவர்களாகவும், நிதி பரிமாற்றம் செய்பவர்களாகவும் இவர்கள் செயல்பட்டு வந்துள்ளனர். இதைத் தொடர்ந்தே இவர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரி ஒருவருடனும் ஜோதி நெருக்கமாக இருந்துள்ளார். அவருடன் சேர்ந்து இந்தோனேசியாவின் பாலி நகருக்கு சென்று வந்துள்ளார். அங்கிருந்து பல்வேறு பாகிஸ்தான் உளவாளிகளுக்கு தகவல்களைக் கொடுத்து வந்துள்ளார். பாகிஸ்தான் உளவாளிகளுடன் நெருங்கிப் பழகி பல்வேறு ராணுவத் தகவல்களைக் கொடுத்து வந்துள்ளார். இதற்காக ஏராளமான பணத்தையும் அவர் பெற்றுள்ளார். உல்லாச வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு அவர் பாகிஸ்தானுக்கு உளவாளியாக செயல்பட்டதாக கூறப்படுகிறது. ஜோதி இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் நடந்த இப்தார் விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளார். மேலும் அவரது சமூக வலை தளத்தில் பாகிஸ்தானை அடிக்கடி புகழ்ந்து பேசியுள்ளார். பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும், சாதகமாகவும் கருத்துக்களை பதிவிட்டுள்ளார். இன்ஸ்டாகிராமில் அவர் செய்துள்ள பதிவு ஒன்றில் லாகூரை பாகிஸ்தானின் கலாச்சார இதயம் என்று கூறியுள்ளார். அவர் பாகிஸ்தானுக்கு 4 முறைக்கு மேல் சென்று வந்துள்ள தாகவும் பதிவிட்டுள்ளார். இவரது யூடியூப்பிற்கு 3.2லட்சம் சந்தாதாரர்கள் உள்ளனர். இன்ஸ்டாகிராமில் இவரை 13.4 லட்சத்திற்கும் அதிகமானோர் பின் தொடர்கின்றனர். இவர் மீது பி.என்.எஸ். சட்டப்பிரிவு 152ன் கீழ் 3, 4, 5 ரகசிய சட்டப்பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அவரிடம் எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. நேற்று கோர்ட்டில் ஆஜர்படுத்தப் பட்ட ஜோதி 5 நாள் போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இப்போது இந்த வழக்கு ஹிசார் பொருளாதார குற்றப்பிரிவு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஜோதியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பி.எஸ்.எல்.வி. சி61 ராக்கெட் திட்டம் தோல்வி

ஸ்ரீஹரிகோட்டா, மே 18-

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி61 என்ற ராக்கெட் இன்று காலை 5.59 மணிக்கு விண்ணில் பாய்ந்தது. ஆனால், விண்ணில் பாய்ந்த சில நிமிடங்களில் பி.எஸ்.எல்.வி. சி61 ராக்கெட் தோல்வியடைந்தது. இந்த ராக்கெட்டில் 1,696.24 கிலோ எடை கொண்ட இ.ஓ.எஸ்09 என்ற செயற்கைக்கோள் பொருத்தப்பட்டுள்ளது. இது அதிநவீன பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். அனைத்து கால நிலைகளிலும் துல்லியமாக படங்களை எடுக்கும் திறன் கொண்டது. திட்டமிட்ட இலக்கில் செயற்கைக்கோளை ராக்கெட் நிலை நிறுத்த முயற்சித்தது. ஆனால், தொழில்நுட்ப கோளாறு காரணமாக ராக்கெட் தோல்வியடைந்தது. விவசாயம், கடல் வளம், வெள்ளம் கண்காணிப்பு, கடலோர பாதுகாப்பிற்கும் இந்த செயற்கைக்கோள் பயன்படுத்தப்பட இருந்தது. பூமியில் எந்தவொரு இடத்தையும் துல்லியமாக படம் பிடிக்கும் கேமரா கொண்ட செயற்கைக்கோள் இதுவாகும். இஸ்ரோ ஏவிய 101வது ராக்கெட் இதுவாகும். ஆனால், ஏவிய சில நிமிடங்களில் ராக்கெட் தோல்வியடைந்தது. இதனால், செயற்கைக் கோளை திட்டமிட்ட இலக்கில் நிலைநிறுத்த முடியவில்லை. இந்த தோல்வி குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.



E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• ஞாயிறு • மே 18, 2025

# ஊரக வளர்ச்சித்துறை ஆணையாளரிடம் கோரிக்கை மனு



தென்காசி, மே 18-

சங்கரன்கோவிலில் உள்ளாட்சி பணிகளை பார்வையிட வருகை தந்த ஊரக வளர்ச்சித்துறை ஆணையாளர் பொன்னையா மற்றும் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோரிடம் தென்காசி மாவட்ட பஞ்சாயத்து கூட்டமைப்பு தலைவர் டி.கே.பாண்டியன் அளித்த கோரிக்கை மனுவில், ஒன்றாவது கணக்கு எண்ணில் பணம் இல்லாத ஊராட்சிகளுக்கு தலா 6 லட்சம் ரூபாய் இரண்டாவது கணக்கு எண்ணில் இருந்து அல்லது சிறப்பு நிதியிலிருந்து ஒவ்வொரு பணம் இல்லாத ஊராட்சிகளுக்கும் வழங்க வேண்டும். மீண்டும் தனிப்பட்டா, அரசு புறம்போக்கு என்று நமது தென்காசி மாவட்டத்திலேயே சங்கரன்கோவில், வி.கே.புதூர், கோவிந்தப்பேரி போன்ற ஊராட்சிகளில் மொத்தம் ஒரு 36 நபர்களுக்கு கலைஞர் கனவு இல்லம் ஒதுக்கியும் தகுதி இருந்தும் சில பட்டா மாறுதல் ஆகாத காரணத்தினால் அவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை மறு பரிசீலனை செய்து உடனடியாக வேலை தொடங்க உதவ வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினார். கடையம் ஊராட்சி பிடிஓ கண்ணன், கடையம் பகுதி முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அமீர்கான் உடன் இருந்தனர்.

# மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி கனிமொழி எம்பி துவக்கி வைத்தார்



சங்கரன்கோவில், மே 18-

சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு திமுக மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஜலால் ஏற்பாட்டில் பேருந்து நிலையம் முன்பாக 100 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை கனிமொழி எம்பி துவக்கி வைத்து மரக்கன்றுகளை நட்டு வைத்தார். நிகழ்ச்சிக்கு தென்காசி வடக்கு திமுக மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, தென்காசி எம்பி டாக்டர் ராணிஸ்ரீ குமார், முன்னாள் எம்பி ஹெலன் டேவிட்சன், திமுக மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி எம்எல்ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, பரமகுரு, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முன்னாள் எம்எல்ஏ முத்துச்செல்வி, நகர செயலாளர் பிரகாஷ், சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அழகு துரை முன்னிலை வகித்தனர். மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிச்சாமி, மகேஸ்வரி, பராசக்தி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் முனியசாமி, ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை சேர்ம துரை, கிறிஸ்டோபர், பொன் முத்தையா, பாண்டியன், பூஜை பாண்டியன், பெரியதுரை, வெள்ளத்துரை ராமச்சந்திரன், பால்ராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், ராயல், கார்த்தி, ராஜராஜன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் விஜய பாண்டியன், துணை அமைப்பாளர் பாரதி, தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், மின்வாரிய தொமுச செயலாளர் மகாராஜன், சங்கர் ராஜ், முன்னாள் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சுப்பையா மற்றும் வார்டு செயலாளர்கள் வாழைக்காய் துரை பாண்டியன், தடிகாரன் ராமலிங்கம் வீரா வெங்கடேஷ் மற்றும் ஜெயக்குமார் பாலாஜி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய நகர வார்டு பொறுப்பாளர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கோடைக்கால கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாம் நிறைவு விழா




ஈரோடு, மே 18-

ஈரோட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மைதானத்தில் கோடைக்காலத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கூடைபந்தாட்ட பயிற்சி வழங்கப்படுவது வழக்கம். ஈரோடு கூடைப்பந்தாட்ட கழகம், கதிர்வேல் கூடை பந்தாட்ட கழகம் மற்றும் ரவுண்ட் டேபிள் அமைப்பினர் இணைந்து நடத்திய இலவச கோடைக்கால பயிற்சி முகாம் கடந்த ஏப்ரல் 25ம் தேதி தொடங்கியது. 10 வயது முதல் 16 வயது வரையிலான 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்ட இந்த பயிற்சி முகாமில் கலந்துகொண்ட அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக ஷூ, டிரஸ் மற்றும் பந்து ஆகியவை வழங்கப்பட்டன. 21 நாட்கள் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில் காலை உணவாக பால், முட்டை வழங்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் சிறப்பாக பயிற்சி பெற்றவர்கள் மாவட்ட கூடைபந்தாட்ட அணிக்கு தேர்வு செய்யப்பட்டனர். பயிற்சி முகாம் நிறைவு விழா ஈரோடு வ.உ.சி பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஈரோடு கூடைப்பந்து கழகத்தின் தலைவரும், சுதா மருத்துவமனையின் நிர்வாக இயக்குனருமான டாக்டர் சுதாகர் தலைமை தாங்கினார். ஈரோடு மாவட்ட கூடை பந்து கழகத்தின் துணைத் தலைவர் கார்த்தியாகினி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சிவானந்தம், மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர். ஈரோடு மாவட்ட கூடைப்பந்தாட்ட கழகத்தின் செயலாளர் கோபிநாத், கதிர்வேல் கூடை பந்தாட்ட கழகத்தின் தலைவர் ஆனந்த், ஈரோடு மாவட்ட கூடை பந்தாட்ட கழகத்தின் முன்னாள் துணைத் தலைவர் கோகுல், இசான் கூடை பந்தாட்ட கழகத்தின் தலைவர் சுப்பிரமணியன், ஈரோடு ஸ்பைஸ் ரவுண்டு டேபிள் ராகுல் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா பந்தக்கால் நடும் நிகழ்ச்சி



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா வருகின்ற ஜீலை 7ம் தேதி நடைபெறவுள்ளதைத்தொடர்ந்து, அவ்விழாவிற்கான யாகசாலை பந்தக்கால் நடுதல் மற்றும் பூமி பூஜை செய்தல் நிகழ்ச்சி மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

# அடுக்குமாடி குடியிருப்புகள் ஆய்வு



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா திருப்பூர் மாவட்டம், பெருந்தொழுவு திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# அடுக்குமாடி குடியிருப்புகளை மேலாண்மை இயக்குநர் ஆய்வு



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், ஹைடெக் நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# கலைஞரின் கனவு இல்ல திட்ட பணிகளை ஆட்சியர் ஆய்வு




திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பொங்கலூர் ஊராட்சி, காட்டுப்பாளையத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

## தமிழ் புதல்வன், புதுமைப்பெண் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



**திருவண்ணாமலை, மே 18–**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக தமிழ் புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு மாணவ, மாணவிகளின் விவரங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வது குறித்த பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரால் துவங்கப்பட்ட மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி புதுமைப்பெண் திட்டமானது 2022 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி உயர்க்கல்வி முடிக்கும் வரை மாதம் ரூ.1000 வீதம் அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பு சேரும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்ப்புதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டு மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களின் வாயிலாக நமது மாவட்டத்தில் 120 கல்லூரிகளில் பயிலும் 13367 மாணவிகள் மற்றும் 14561 மாணவர்களும் ஆக மொத்தம் 27928 மாணவ மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

இன்றையதினம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களின் கீழ் விண்ணப்பித்துள்ள மாணவ, மாணவிகளின் கல்லூரியில் பட்டப்படிப்பு, பட்டய படிப்பு, அனைத்து வகையான பாடப்பிரிவுகளின் முடிவு (Course Complete) விவரங்ளை புதுப்பித்தல், மாணவ, மாணவிகளை அடுத்த கல்வியாண்டிற்கு மாற்றுதல் மற்றும் வருகை நிலையினை (Student Attendance) புதுப்பித்தல் ஆகியன குறித்த பயிற்சி கூட்டமானது நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் கீழ் எந்த ஒரு மாணவ, மாணவிகளும் விடுபடாமல் அனைவரையும் பயன்பெற செய்ய வேண்டும் என்றும், பணிகளை விரைந்து முடித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், மாநில மேலாண்மை குழு ஒருங்கிணைப்பாளர் யோகேஸ்வரி, முதன்மை வங்கி மேலாளர், மாவட்ட மின் மேலாளர், அனைத்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டார்கள்.

## ஏளூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆட்சியர் ஆய்வு

**நாமக்கல், மே 18–**

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஏளூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா ஆய்வு மேற்கொண்டு, சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுடன் கலந்துரையாடினார்.



அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகை தரும் நோயாளிகள் விபர பதிவேடு, சிகிச்சை வசதிகள், மருந்துகளின் இருப்பு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விபரம், ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்துள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் விபரம், இரத்த மாதிரி சேமிக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விபரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, மருத்துவ பணியாளர்களிடம் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். மேலும், புற நோயாளிகள் பிரிவில் நோயாளிகள் பதிவு செய்து ஒப்புச்சீட்டு பெறுவதை பார்வையிட்டு, அவர்களது உடல்நிலை குறித்து ஆரம்ப சுகாதார நிலையத்தில் அளிக்கப்படும் சிகிச்சையின் தரம் குறித்து கலந்துரையாடினார்.

மேலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அதிநவீன வசதியுடன் சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் லவசமாக சிகிச்சை அளிக்கப்படுவது குறித்தும், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின் கீழ் சாலை விபத்துகளின் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியார் மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுவது குறித்தும் எடுத்துரைத்து, இதேபோன்று அனைவரும் அரசின் சேவைகளை பயன்படுத்தி கொண்டு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று தங்கள் உடல் நலனை காத்து கொள்ள வேண்டும் என ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை பெற வருகை புரிந்தவர்களிடம் ஆட்சித்தலைவர் எடுத்துரைத்தார்.

## கடலூர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்பு குழுக்கூட்டம்



**கடலூர், மே 18–**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் கண்காணிப்பு குழுத் தலைவர், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணு பிரசாத் மற்றும் கண்காணிப்பு குழுத் இணைத்தலைவர், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை, பள்ளிக்கல்வித் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பொதுப் பணித்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் துறை, விளையாட்டுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வாயிலாக மத்திய மற்றும் மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பயன்பாடு, முன்னேற்றம் மற்றும் செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில், கடலூர் மற்றும் சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததாவது: மத்திய அரசு திட்டங்கள் மற்றும் அதன் நோக்கம் சரியாக நிறைவேற்றப்படுவதை மாவட்ட அளவில் கண்காணித்து நிறை வேற்றுவது மற்றும் ஆலோசனைகள் வழங்குவது மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் பணியாகும். மத்திய அரசின் திட்டப்பணிகள் செயல்படுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளை சரியான நேரத்தில் களைந்து அதற்கான தீர்வு கண்டு பணிகளை சிறப்பாக நிறைவேற்ற மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டியாக இந்தக்குழு செயல்படுகிறது.

கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மத்திய அரசுத் திட்டங்களை செயல் படுத்துவதை கண்காணித்திடும் பொருட்டு மாவட்ட வளர்ச்சி ஒருங் கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் காலாண்டிற்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களை செயல்படுத்தும் அலுவலர்களுடன் திட்ட செயல் பாடுகளின் மேற்கொள்ளப்பட்டது.

வேளாண்மைத்துறை மூலம் ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட 10,350 பணிகளில் 9,296 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மண்வள அட்டை இயக்கம் திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட 20,250 பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. பிரதான் மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தில் 2023–24ஆம் ஆண்டில் 1,06,260 விவசாயிகள் 2,63,635 ஏக்கர் பரப்பளவில் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளதில் 30,518 விவசாயிகளுக்கு 67,294 ஏக்கர் பரப்பளவிற்கு ரூ.2360.70 லட்சம் மதிப்பீட்டில் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 2024–25ஆம் ஆண்டில் 80.659 விவசாயிகள் 2,13,516 ஏக்கர் பரப்பளவில் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளதில் 13,096 விவசாயிகளுக்கு 40,495 ஏக்கர் பரப்பளவிற்கு ரூ.3619.98 லட்சம் மதிப்பீட்டில் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட 70 பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டததில் 2024–25ஆம் ஆண்டில் 4,99,562 பணி வழங்கப்பட்ட நபர்கள் மூலம் 1,55,82,461 ருவாக்கப்பட்ட மனித சக்தி நாட்களாகும். 2025–26ஆம் ஆண்டில் 34,822 பணி வழங்கப்பட்ட நபர்கள் மூலம் 2,34,733 உருவாக்கப்பட்ட மனித சக்தி நாட்களாகும். பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி மகா அபியான் திட்டத்தில் 2023–24 மற்றும் 2024–25 ஆகிய ஆண்டுகளில் எடுக்கப்பட்ட 532 பணிகளில் 194 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் 2023–24ஆம் ஆண்டில் 78 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. தனிநபர் இல்லக் கழிவறைகள் 2024–25ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட 6,283 பணிகளில் 2,374 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சமுதாய சுகாதார வளாகம் திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட 13 பணிகளில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 831.25 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 102 பணிகளில் 47 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2025–26ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 108.10 லட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 7 பணிகளும் நடைபெற்று வருகிறது. பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டிற்கு எடுக்கப்பட்ட 7 பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கால்நடை நோய் தடுப்பூசி திட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி செலுத்த 2,95,860 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டதைவிட 2,99,700 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. பன்றிக்காய்ச்சல் தடுப்பூசி செலுத்த 5,500 ளிஜிளிளிஜி இலக்கு நிர்ணயிக்கப்பட்டதைவிட 5,710 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. சப்பை நோய்க்கு 10,100 இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளது. தாட்கோ மூலம் பிரதம மந்திரியின் பட்டியலின மேம்பாட்டுத் திட்டத்தில் 2023–24ஆம் ஆண்டில் தனிநபருக்கு நிர்ணயிக்கப்பட்ட 146 பணிகளும், குழுவினருக்கு நிர்ணயிக்கப்பட்ட 17 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. 2024–25ஆம் ஆண்டில் தனிநபருக்கு நிர்ணயிக்கப்பட்ட 260 பணிகளும், குழுவினருக்கு நிர்ணயிக்கப்பட்ட 87 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை மூலம் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.202 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.194 லட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வாயிலாக 2024–25 ஆம் ஆண்டிற்கு 11,121.93 லட்சத்தில் 32 பணிகளாக 537.80 கிலோ மீட்டர் புதிய உயர்மின் அழுத்தப் பாதை நிறுவுதல், 343.82 கிலோ மீட்டர் புதிய தாழ்மின் அழுத்தப் பாதை நிறுவுதல், 1,168 புதிய மின் மாற்றிகள் அமைத்தல் பணிகள் நடைபெறுகிறது.

ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற வகையில், ஊரகப் பகுதிகளில் இருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் இடம் பெயர்வதை குறைக்கும் வகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் கிராம ஊராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், திட, திரவ கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்ற மேற்கொள்வதற்காக தூய்மைபாரத இயக்கம் மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர் இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்து மேம்படுத்துதல், கர்ப்பிணி தாய்மார்களின் நலனுக்கான திட்டம், கருவுற்ற மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு பல்வேறு மருத்துவ வசதிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் மத்திய அரசின் திட்டங்களாக இருந்தாலும், மாநில அரசின் திட்டங்களாக இருந்தாலும் குறித்த காலத்திற்குள் தரமான வகையில் முடிக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் உள்ளிட்ட அனைத்துத் திட்டப்பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைசெல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா, சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ஸ்ரீஇளஞ்சோலை மாரியம்மன் கோவில் செடல் திருவிழா




திருவெண்ணெய்நல்லூர் கிருபாபுரீஸ்வரர் திருநாவலுரைச் சேர்ந்த சுந்தரருக்கும் ஆட்கொண்டூர் நீதி அரசர்களால் நீதி வழங்கிய தடுத்தாட்கொண்டூர் கிராமத்தில் ஸ்ரீஇளஞ் சோலை மாரியம்மன் கோவில் செடல் திருவிழா, தேர் வீதி உலாவுடன் மிக விமர்சையாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்தனர்.

# சாரதா கங்காதரன் கல்லூரியில் 24ஆம் ஆண்டு விழா




**புதுசேரி, மே 18-**

புதுசேரி, வேல்ராம்பட்டில் உள்ள சாரதா கங்காதரன் கல்லூரியில் 24 ஆம் ஆண்டு விழா வெகுச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரியின் தலைவர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முனைவர் சு.பழனிராஜா பாராட்டுரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். பாபு 2024 – 25 ஆம் கல்வி ஆண்டிற்கான, ஆண்டு அறிக்கையை அவையோர் முன் சமர்ப்பித்தார். இவ்விழாவின் முக்கிய அம்சமாக புதுவையின் தலைமை நீதிபதி ஆனந்த் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், மாணவ, மாணவிகள் சமுதாயத்தில் மருத்துவராகவோ, வக்கீல்களாகவோ, காவல்துறை அதிகாரியாகவோ ஆகலாம். ஆனால் இவர்களிடம் செல்லும் நோயாளிகளாகவோ, குற்றவாளிகளாகவோ ஆகி விடக்கூடாது என்பதை வலியுறுத்தினார். மேலும் சாரதா கங்காதரன் கல்லூரியை துவங்குவதற்கு உறுதுணையாக இருந்த ஆடிட்டர் வைத்தியநாதன், கல்லூரியின் ஆலோசகரும் பேராசிரியருமான மோகன்தாஸ் மற்றும் வழக்கறிஞரான பேராசிரியர் மோகனம் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்களான பெற்றோர்களும் கலந்துகொண்டனர். தேசிய கல்வி தினம், தேசிய அறிவியல் தினம், அகில உலக மகளிர் தினம் மற்றும் கல்லூரியில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 2024–25 ஆம் கல்வியாண்டில் கல்வி உட்பட பல்வேறு துறைகளிலும், தன் திறமையை வெளிப்படுத்திய கணினி அறிவியல் மூன்றாம் ஆண்டு மாணவர் வி.யுவராஜ், ஓவரால் சாம்பியன் பட்டத்தை வென்றார். இவரைத் தொடர்ந்து முதுகலை கணினி துறையைச் சார்ந்த வி.ரவீனா, முதுகலை கணிதத் துறையைச் சார்ந்த ஜி.சுபாஷினி ஆகியோருக்கு கல்லூரி அளவில் கல்வியில் முதலிடம் பெற்றதற்காக சான்றிதழ்களும், கோப்பைகளும் வழங்கப்பட்டன. அனைத்து துறைகளிலும் கல்வியில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இளங்கலை மேலாண்மைத் துறையைச் சார்ந்த ஆகாஷ் விளையாட்டில் ஓவரால் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

# புதிய வழித்தடங்களில் பேருந்து சேவை ராஜேஸ்குமார் எம்பி தொடங்கி வைத்தார்




**நாமக்கல், மே 18-**

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஏளூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் 2 புதிய வழித்தடங்களில் நகரப்பேருந்து சேவையை நீட்டிப்பு செய்து பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து. பேருந்து பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் தெரிவித்தாவது: தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு சாதாரண கட்டண பேருந்துகளில் மகளிர் விடியல் பயணத்திட்டம் 07.05.2021 முதல் தொடங்கப்பட்டு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் கடந்த 4 ஆண்டுகளில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த ஆட்சி மகளிருக்கான ஆட்சி என கூறும் வகையில் பெண்களின் நலன் காக்க மாதம் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமைத்தொகை திட்டம், உயர்கல்வி பயில வறுமை ஒரு தடையாக இருக்க கூடாது என்பதற்காக பெண்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவித்திட மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், அரசு பள்ளியில் பயின்ற மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி கனவை நனவாக்க மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை உள்ளிட்ட உயர்கல்வி பயில 7.5 சதவிகிதம் இடஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கடன் தள்ளுபடி செய்து மீண்டும் கடனுதவிகளை வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர் உற்பத்தி பொருட்களை எடுத்து செல்ல அரசு பேருந்துகளில் கட்டணமில்லா திட்டம், 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, விவசாய கடன் தள்ளுபடி, முதியோர் உதவித்தொகை ரூ.1,000லிருந்து ரூ.1,500 ஆக உயர்வு, ஏழை, எளிய கிராமப்புற மக்களின் வீடு கட்டும் கனவை நனவாக்கும் வகையில் ரூ.3.50 லட்சம் வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டம். படித்த இளைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கிட தொழில் கடன் வழங்கும் திட்டம், நான் முதல்வன் என பல்வேறு திட்டங்களை இந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தி உள்ளார்கள்.

மேலும், மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா இலவச விடியல் பயண திட்டத்தை செயல்படுத்தி பணிக்கு செல்லும் மகளிர் மற்றும் சுய தொழில் புரியும் மகளிரின் பயண செலவை மிச்சப்படுத்தி அவர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்தி உள்ளார்கள். மகளிர் பயணம் செய்வதற்கான கட்டணத்தை முதலமைச்சர் போக்குவரத்து துறைக்கு செலுத்தி வருகின்றார்கள். இதன் மூலம் மாதந்தோறும் மகளிர் பயண செலவு தொகையை சுமார் ரூ.800 வரை சேமிக்கின்றார்கள். இவ்வாறு ஏழை, எளிய மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்கி, அவர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்தி வருகின்றார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த திட்டங்கள் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் செயல்படுத்தபடாத திட்டங்கள் ஆகும்.

இன்றைய தினம் பள்ளி, கல்லூரி மற்றும் பொதுமக்களின் போக்குவரத்து வசதியை எளிமையாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் நகரப்பேருந்து புதிய வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இது ஏழை, எளியோருக்கான ஆட்சி, மகளிருக்கான ஆட்சி, எனவே, ஏழை, எளிய மக்கள் அரசின் திட்டங்களை பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில், திருச்செங்கோட்டிலிருந்து பெரியமணலி வந்து செல்லும் தடம் எண்:டி14 நகரப்பேருந்தை ஏளூர் ஆரம்ப சுகாதார நிலையம் வரையிலும், இராசிபுரத்திலிருந்து ஏளூர் வரும் தடம் எண்:ஆர்52சி நகரப் பேருந்தை புதுப்பட்டி காலனி வரையிலும் என 2 புதிய வழித்தடங்களில் நகரப்பேருந்து சேவையை நீட்டிப்பு செய்து பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்து பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் மண்டலம்) கோட்ட மேலாளர் ப. செங்கோட்டுவேலன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நம்பிக்கை இல்லாத விளம்பரங்களை நம்பி தொலைபேசி எண் மூலம் ஆவணங்களை கொடுக்க வேண்டாம்



## புதுச்சேரி டிஐஜி அறிவிப்பு

**காரைக்கால், மே 18-**

நம்பிக்கை தன்மை இல்லாத விளம்பரங்களை நம்பி தொலைபேசி எண் மூலம் தங்களது ஆவணங்களை கொடுக்க வேண்டாம். என, காரைக்காலில் புதுச்சேரி டிஐஜி சத்திய சுந்தரம் அறிவித்துள்ளார்.

வாரந்தோறும் சனிக்கிழமைகளில் புதுச்சேரி காவல்துறை சார்பில், புதுச்சேரி டிஜிபி ஷாலினிசிங் உத்தரவின்படி, ஒவ்வொரு காவல் நிலையங்களிலும், மக்கள் மன்றம் என்ற பொதுமக்களின் புகார்களை கேட்டறிந்து அவர்களுக்கு உரிய தீர்வு அளிக்கும் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக நேற்று, புதுச்சேரி காவல்துறை டிஐஜி சத்திய சுந்தரம் தலைமையில், காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலக வாயிலில், மக்கள் மன்றம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, புதுச்சேரி டிஐஜி சத்திய சுந்தரம் தலைமை தாங்கினார். மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சௌஜன்யா, காரைக்கால் மாவட்ட இன்ஸ்பெக்டர்கள் மரி கிறிஸ்டியன் பால், செந்தில்குமார், பிரவீன் குமார், மர்தினி, லெனின் பாரதி, புருஷோத்தமன் மற்றும் சப்–இன்ஸ்பெக்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முன்னதாக மத்திய உள்துறை அமைச்சகத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 3 புதிய குற்றவியல் சட்டங்கள் பற்றியும் மற்றும் ஜீரோ எஃப் ஐ ஆர் ஆகியவை குறித்தும் புகார் அளிக்க வந்த பொதுமக்களிடம் புதுச்சேரி காவல்துறை டிஐஜி சத்திய சுந்தரம் விவரித்து விழிப்புணர்வு அளித்தார். தொடர்ந்து, புதுச்சேரி காவல் துறையில் பயிற்சி பெற்ற 30 பெண் கமாண்டக்களில் காரைக்கால் மாவட்டத்திற்கு 4 பெண் கமாண்டோகளை புதுச்சேரி காவல்துறை டிஐஜி சத்ய சுந்தரம் அறிமுகம் செய்து வைத்து பேசியதாவது: மக்கள் மன்றம் நிகழ்ச்சி புதுச்சேரி காவல்துறை டிஜிபி உத்தரவின்படி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தொடர்ந்து பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் புகார்கள் ஏதேனும் இருந்தால் தன்னிடம் தெரிவிக்கலாம். புகார்கள் அனைத்தும் உரிய காலங்களில் தீர்வு காணப்படும்.

மேலும், இன்று நடைபெற்ற மக்கள் மன்ற நிகழ்ச்சியில் பொது மக்களின் வருகை மக்கள் மன்றம் நிகழ்ச்சிக்கு மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது. வேலை மற்றும் கடன் வாங்கி தருவதாக பொய்யாக கூறி பொதுமக்களிடமிருந்து ஆவணங்களை பெற்றுக்கொண்டு மோசடிகளை சைபர் குற்றவாளிகள் செய்து வருகின்றனர். அவ்வாறு நம்பிக்கை தன்மை இல்லாத விளம்பரங்களை நம்பி தொலைபேசி எண் மூலம் தங்களது ஆவணங்களை கொடுக்க வேண்டாம். சைபர் ரீதியான குற்றங்களை உடனடியாக பொதுமக்கள் குற்றத்தடுப்பு பிரிவில் புகார் அளிக்க வேண்டும். அல்லது 1930 என்ற எண்ணிற்கு தங்களது புகார்களை பதிவு செய்யும் பொருட்டு அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரியில் அறிமுகம் செய்யப்பட்ட கைரேகை நிபுணர் பிரிவு வாகனம் போன்று காரைக்கால் மாவட்டத்திற்கு ஒரு வார காலத்திற்குள் கைரேகை நிபுணர் பிரிவு வாகனம் ஒன்று புதிதாக வழங்கப்பட உள்ளது. காரைக்கால் மாவட்ட போக்குவரத்து காவல்துறை சார்பில் திருநள்ளாறு பகுதியில் போக்குவரத்து காவல் நிலையம் நிறுவப்பட உள்ளது. என்றார்.

இறுதியாக நேற்றைய மக்கள் மன்ற நிகழ்ச்சியில், 20க்கும் மேற்பட்டோர் எழுத்துப்பூர்வமாக புதுச்சேரி காவல்துறை டிஐஜி சத்திய சுந்தரத்திடம் பல்வேறு புகார் மனுக்களை அளித்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# பாலாஜி மேல்நிலைப் பள்ளி 100 சதவீதம் தேர்ச்சி




**புதுச்சேரி, மே 18-**

புதுச்சேரி மாநிலம், நெட்டபாக்கம் கொம்யூன், ஏம்பலத்தில் இயங்கி வரும் பாலாஜி மேல்நிலைப் பள்ளியல் 2024–2025ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 166 மாணவர்கள் தேர்வு எழுதி 166 மாணவர்களும் 100 % தேர்ச்சி பெற்றுள்ளனர். புதுவை மாநிலத்தில் முதலிடமும் 500க்கு 497 மதிப்பெண்கள் பள்ளி அளவில் முதலிடமும் 500க்கு 497 மதிப்பெண்கள் தீபஸ்ரீ என்ற மாணவி பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாநில அளவில் மூன்றாம் இடமும் பள்ளி அளவில் இரண்டாம் இடத்தையும் வி.ஷோபனா என்ற மாணவி 500க்கு 495 மதிப்பெண்களும், பள்ளி அளவில் மூன்றாமிடத்தில் அஸ்வினி மற்றும் தக்ஷயா ஆகிய இரு மாணவிகளும் 500க்கு 492 மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் ஆங்கிலம் 1. அறிவியல் 9. சமூக அறிவியல் 6 மாணவர்கள் பெற்றுள்ளனர். மேலும் தமிழில் 99 மதிப்பெண்கள் 3 மாணவர்களும், கணிதத்தில் 99 மதிப்பெண்கள் 2 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

450 மதிப்பெண்களுக்கு மேல் 56 மாணவர்களும் 400 மதிப்பெண்களுக்கு மேல் 101 மாணவர்களும் பெற்று நகர்ப்புற பள்ளிகளை விட கிராமப்புறத்தில் இமாலய சாதனையைப் பெற்றுள்ளனர். மேலும் இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கடலூர் டவுன்ஹால் புனரமைப்பு பணிகளை ஆட்சியர் ஆய்வு



**கடலூர், மே 18-**

கடலூர், டவுன்ஹால் புனரமைப்பு பணிகள் தேவனாம்பட்டினத்தில் உள்ள அகழியை மேம்படுத்துவது நடைபெறுவதையும், குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், கடலூர் டவுன்ஹால் அரசு விழாக்கள், உள்ளூர் கலைஞர்களின் நிகழ்ச்சிகள், பொதுமக்களின் குடும்ப விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அரசின் மூலம் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வந்தது. டவுன்ஹால் பழமையான கட்டடம் என்பதாலும், தற்போதைய காலத்தின் தேவைகளுக்கேற்ப நவீனமான முறையில் பழமை மாறாமல் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் மணவறை, மணமகள் அறை, மணமகன் அறை, சமையலறை, உணவுக்கூடம். வண்ண விளக்குகள் அடங்கிய அலங்கார ஹால், வாகன நிறுத்தம், வளாகத்தில் ஃபேவர்பிளாக் பதித்தல், சுற்றுச்சுவர், கழிவறை, குளியறை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வெகுவிரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைக்கப்பட உள்ளது.

தேவனாம்பட்டினம் வெள்ளிக் கடற்கரைக்கு உள்ளூர் மற்றும் வெளிமாநிலத்தை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். மேலும், பயணிகளின் வருகையினை அதிகரிக்கும் வகையில் வெள்ளிக் கடற்கரை பகுதியை அதிநவீன பொழுதுபோக்கு மின்சாதனங்கள் அமைத்தல், அழகிய வேலைப்பாடுடன் கூடிய பூங்கா, செயற்கை நீருற்றுகள், ஓய்வெடுக்கும் பகுதிகள், பெயர் பலகைகள், சாலை தடுப்புகள், அழகிய நடைபாதை, சிற்றுண்டி விற்பனை கடைகள், சில்வர் குப்பைத்தொட்டிகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது தேவனாம்பட்டினம் அருகே உள்ள அகழியினை மேம்படுத்தி படகு குழாம் அமைத்திடும் வகையிலும், அகழி அருகே பூங்காக்கள் அமைத்து பொழுதுபோக்கு அம்சம் நிறைந்த பகுதியாக மாற்றப்பட உள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் எந்தவித செலவின்றி உள்ளூர் பகுதியிலேயே தங்கள் குடும்பங்களுடன் மகிழ்ச்சியாக இருக்க வழிவகுக்கும் என தெரிவித்தார்.

# இலங்கை தமிழ் மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டி நிகழ்ச்சி




**திருவண்ணாமலை, மே 18-**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் திருவண்ணாமலை மாநகராட்சி, தியாகி நா.அண்ணாமலைபிள்ளை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இலங்கை தமிழ் மாணவ, மாணவியர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அரசு சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயிலுவதற்கு தேவையான வழிகாட்டும் நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. அதன்படி தியாகி நா.அண்ணாமலைபிள்ளை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இலங்கை தமிழ் மாணவ, மாணவியர்களுக்கான வழிகாட்டி நிகழ்ச்சியில் உயர்கல்வி பயிலுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் உதவிகள் துறைச் சார்ந்த ஆலோசகர்கள் மூலம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிறப்புரையாற்றியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சிறந்த திராவிட மாடல் ஆட்சியை செயல்படுத்தி வருகிறார்கள், அதன்படி இலங்கை தமிழர்கள் நலனில் அக்கறை கொண்டு இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி பயில தக்க வழிகாட்டும் "கலங்கரை" நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

கல்வி என்பது பாலினம், சாதி, மதம் உள்ளிட்ட அனைத்து வேறுபாடுகளையும் கடந்து சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சமமானது. சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவதற்கு மாணவர்களாகிய நீங்கள் கல்வியை கற்க வேண்டும். அதிலும் உயர்கல்வியை கற்க வேண்டும். உயர்கல்வி மூலமாக தான் வாழ்க்கைக்கு தேவையான பண்புகள் மற்றும் சமூகத்தில் உள்ள பங்களிப்பினை அறிந்து கொள்ள ஏதுவாக அமையும். உயர்கல்வியை பெறுவதன் மூலமாக சமுதாயத்தில் சிறந்த நிலையை அடைய முடியும். அதனை கருத்திற் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ ,மாணவியர்கள் உயர்கல்வியை பெற்று சமுதாயத்தில் உயர்ந்த நிலைய அடைய வேண்டுமென்ற நோக்கத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதுபோன்று அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை எல்லாம் மாணவ மாணவியர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், தனி வட்டாட்சியர், இலங்கை தமிழ் மறுவாழ்வு சஜேஷ் பாபு, திருவண்ணாமலை வட்டாட்சியர், மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# வருவாய் தீர்வாயத்தில் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்




**சேலம், மே 18-**

சேலம் மேற்கு வட்டத்திற்கான வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி உதவிகளை வழங்கினார்கள்.

சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் 14.05.2025 முதல் இன்று 16.05.2025 வரை நடைபெற்ற வருவாய் தீர்வாயம் 1434 பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

பின்னர், வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் 14.05.2025 முதல் 22.05.2025 வரை 1434ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் நடைபெற்று வருகிறது. இந்த வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்கள் பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டா, வாரிசுச் சான்று, பிறப்பு மற்றும் இறப்புச் சான்று. குடும்ப அட்டை, சாதிச்சான்று, வருமானச் சான்று. முதல் பட்டதாரிச் சான்று, இருப்பிடச் சான்று, ஆதரவற்ற விதவைச் சான்று, கணினி சிட்டா பெயர் திருத்தம், மின்சார இணைப்பு, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, நில அளவை, குடிநீர், பொது சுகாதாரம், தெருவிளக்கு, சாலை வசதி, பசுமை வீடு, சிறு, குறு விவசாயி சான்று மற்றும் இதர மனுக்களும் விண்ணப்பித்துப் பயன்பெற வழிவகை செய்யப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

சேலம் மேற் மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் 14.05.2025 முதல் 16.05.2025 வரை 3 நாட்கள் நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டைகள், வாரிசு சான்றிதழ் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டது.

குறிப்பாக சேலம் மேற்கு வட்டத்திற்கு நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் முதல் நாளான 14.05.2025 அன்று அழகாபுரம் குறுவட்டத்திற்குட்பட்ட அழகாபுரம் புதூர், அழகாபுரம், செட்டிசாவடி, நரசோதிப்பட்டி, ரெட்டியூர், பள்ளப்பட்டி, மெய்யனூர், கந்தம்பட்டி, போடிநாயக்கன்பட்டி ஆகிய வருவாய் கிராம பொதுமக்களிடமிருந்து 49 மனுக்களும், இரண்டாம் நாளான 15.05.2025 அன்று சூரமங்கலம் குறுவட்டத்திற்குட்பட்ட சூரமங்கலம், அரியாகவுண்டம்பட்டி, சௌதாபுரம், புத்தூர் அக்ரஹாரம், அம்மாபாளையம், மல்லமூப்பன்பட்டி, காமநாயக்கன்பட்டி, ரெட்டிப்பட்டி, அமானி அய்யம்பெருமாம்பட்டி, தளவாய்ப்பட்டி, சேலத்தாம்பட்டி உள்ளிட்ட இதர கிராம பொதுமக்களிடமிருந்து 264 மனுக்களும் பெறப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக இன்றையதினம் நடைபெற்ற திருமலைகிரி குறுவட்டத்திற்குட்பட்ட பெருமாம்பட்டி, கொத்தனூர், இனாம் வேடுகாத்தாம்பட்டி, சித்தனூர் கொல்லப்பட்டி, சர்கார் கொல்லப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராம பொதுமக்களிடமிருந்து 159 மனுக்களும் என மொத்தம் 472 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட அனைத்து மனுக்களையும் சம்பந்தப்பட்ட துறை அலுவலருக்கு வழங்கப்பட்டு, தகுதியுடைய மனுக்கள் மீது உடனடி தீர்வு காண அறிவுறுத்தப்பட்டது. மேலும், கடந்த 3 நாட்களாக பெறப்பட்ட மனுக்களின்மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்றையதினம் 4 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் ஆணையும், 3 பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து வருவாய் தீர்வாயங்களிலும் தொடர்புடைய அலுவலர்கள் பொதுமக்களின் மனுக்களின் மீது தனி கவனம் செலுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், சேலம் மேற்கு வருவாய் வட்டாட்சியர் மனோகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு சான்றிதழ்

## ஆட்சியர் அழகுமீனா வழங்கினார்



**கன்னியாகுமரி, மே 18-**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் அரங்கில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா சான்றிதழ் வழங்கி தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கு நலன்கருதி முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம் அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் தொழில் துவங்குவதற்காக விண்ணப்பித்து, வங்கிகளிடமிருந்து தற்காலிக அனுமதி கடிதம் பெற்ற 25 முன்னாள் படைவீரர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வகுப்பானது ணிஞிமிமி பயிற்சி நிறுவனம் வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் வைத்து 05.05.2025 முதல் 10.05.2025 வரை வகுப்பறை பயிற்சி மற்றும் தொழிற்சாலை பார்வையிடுதல் உள்ளிட்டவைகளும், 12.05.2025 முதல் 15.05.2025 வரை காலத்தில் இணையதள பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சி பெற்ற 25 முன்னாள் படைவீரர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மறுவாழ்வினை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள மிகச் சிறப்பான இத்திட்டத்தில் மேலும் அதிக எண்ணிக்கையிலான முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பித்து பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் நலன் துணை இயக்குநர் மேஜர் ஜெயகுமார்,

முன்னாள் படைவீரர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ஆன்மீக, சுற்றுலா பேருந்து சேவைகளை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்



**கன்னியாகுமரி, மே 18–**

கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் திருநெல்வேலி, நாகர்கோவில் மண்டலத்தின் சார்பில் வடசேரி பேருந்து நிலையத்தில் மகளிர் விடியல் பயணமாக மாறவிருக்கும் கட்டண பேருந்துகள், ஆன்மீக மற்றும் சுற்றுலா பேருந்து சேவைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கைகள் நிறைவேற்றும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்து செய்தியாளர்களிடையே தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து தரப்பட்ட பொதுமக்களின் அடிப்படை தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறார்கள். அதனடிப்படையில் தரமான மற்றும் நம்பகத்தன்மை கொண்ட போக்குவரத்து சேவையினை வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மகளிர் விடியல் பயணம் மகளிர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) நாகர்கோவில் மண்டலத்தில் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு 441 நகர பேருந்துகளும், 298 புறநகர் பேருந்துகளும் என மொத்தம் 739 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்துகளில் நாளொன்றுக்கு சுமார் 9,31,604 பொதுமக்கள் பயணம் செய்து வருகின்றனர். நாகர்கோவில் மண்டலத்தில் இயக்கப்படும் 441 நகர பேருந்துகளில் 319 நகர பேருந்துகள் "மகளிர் விடியல் பயண பேருந்துகளாக" இயக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் 07.05.2021 அன்று முதல் கையெழுத்துயிட்ட முத்தான திட்டங்களில் மகளிர் விடியல் பயணம் திட்டத்தில் நாகர்கோவில் மண்டல பேருந்துகளில் சுமார் 3.25 லட்சம் மகளிர் கட்டணமில்லாமல் தினந்தோறும் மகிழ்ச்சியுடன் பயணம் செய்கின்றனர்.

இத்திட்டம் பெண்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்களிடமும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அனைத்து மகளிர் விடியல் பயண பேருந்துகளிலும் பெண்கள் இன்முகத்தோடு பயணிக்கும் நிலையை காண முடிகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி கோட்ட பேருந்துகளில் மாநிலத்திலேயே தினமும் 76 சதவீதத்திற்கும் அதிகமாக பெண்கள் கட்டணமில்லா பயணம் செய்கின்றனர். மேலும், சுய உதவி குழுக்களின் மகளிர் உறுப்பினர்கள் சுமார் 25 கிலோ எடை உள்ள பொருட்களை நகர பேருந்துகளில் இலவசமாகவும், சாதாரண புறநகர் பேருந்துகளில் 100 கிலோமீட்டர் வரை இலவசமாகவும் கொண்டு செல்கின்றனர்.

அதன் ஒரு பகுதியாக இன்று நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பொதுமக்கள் சிரமமில்லமால் பயணம் மேற்கொள்ள 35/B செண்பகராமன்புதூர் முதல் ஆசாரிபள்ளம், 4A-TSS நாகர்கோவில் முதல் கேசவன்புதூர், 39-V நாகர்கோவில் முதல் பிள்ளைத்தோப்பு, 4B/B-V நாகர்கோவில் கடுக்கரை முதல் காட்டுப்புதூர், 4V நாகர்கோவில் முதல் கீரிப்பாறை, 4B-V நாகர்கோவில் கடுக்கரை முதல் காட்டுப்புதூர். 31VV/F பார்வதிபுரம் முதல் பார்வதிபுரம், 14E/V நாகர்கோவில் முதல் முட்டம். 11A/A நாகர்கோவில் முதல் தக்கலை, 4A/B நாகர்கோவில் முதல் கேசவன் புதூர். 30 V/B நாகர்கோவில் முதல் ராஜாவூர், 5B/14EV நாகர்கோவில் முதல் குளச்சல், 4C TSSC நாகர்கோவில் முதல் அருமநல்லூர், 31VV/B பார்வதிபுரம் முதல் பார்வதிபுரம், 37/A நாகர்கோவில் முதல் மணக்குடி. 14ணி நாகர்கோவில் முதல் கடியப்பட்டணம், 37கூி நாகர்கோவில் முதல் மணக்குடி, 38சிகூி நாகர்கோவில் முதல் புத்தன் துறை, 33D தேரூர் முதல் தாழக்குடி, 2/A கன்னியாகுமரி முதல் வடசேரி, PCG-2 சின்னமுட்டம் முதல் வடசேரி. 1B/V கன்னியாகுமரி முதல் வடசேரி, 5TSS நாகர்கோவில் முதல் மேற்குநெய்யூர். 5B-TSS நாகர்கோவில் முதல் சைமன்காலனி, 5/B-V நாகர்கோயில் முதல் குளச்சல், 5A/A-TSS குளச்சல் முதல் தக்கலை வரையும்,

5GV/B நாகர்கோவில் முதல் சைமன் காலனி, 5A/5G-TSS சைமன் காலனி முதல் தக்கலை, 11A/V நாகர்கோயில் முதல் மருதூர்குறிச்சி, 5GV/B நாகர்கோவில் முதல் சைமன் காலனி, 13D/C தக்கலை முதல் பெருஞ்சாணி, 12 நாகர்கோவில் முதல் திங்கள் நகர். 89C/B-VV மார்த்தாண்டம் முதல் குளச்சல், 89சி/ஞ் மார்த்தாண்டம் முதல் அருமனை, 89B-TSS மார்த்தாண்டம் முதல் பெருஞ்சாணி, TSS-H-NA மார்த்தாண்டம் முதல் ஹெலன்நகர், 86/C மார்த்தாண்டம் முதல் பேணு, 87E/A மார்த்தாண்டம் முதல் கருங்கல், 46A/B TSS மார்த்தாண்டம் முதல் திங்கள்நகர், 87/D மார்த்தாண்டம் முதல் தேங்காய்பட்டணம், 83கி மார்த்தாண்டம் முதல் இரையுமன் துறை, 82யி மார்த்தாண்டம் முதல் இரையுமன் துறை. 82B/B மார்த்தாண்டம் முதல் கொல்லங்கோடு, 46G தக்கலை முதல் கருங்கல், 87A/B மார்த்தாண்டம் முதல் இணயம், 84 மார்த்தாண்டம் முதல் மணிவிளை, 85k மார்த்தாண்டம் முதல் செண்பகதரிசு. 85 B மார்த்தாண்டம் முதல் பனச்சமூடு, 86/B மார்த்தாண்டம், பத்துக்காணி முதல் ஆலஞ்சோலை, 85GV V மார்த்தாண்டம் முதல் பனச்சமூடு என 52 கட்டண பேருந்து சேவைகளை மகளிர் விடியல் பயண பேருந்து சேவையாக மக்கள் பயன்பாட்டிற்கு இன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் திருநெல்வேலி கோட்டம். நாகர்கோவில் மண்டலத்தில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காகவும், ஆன்மீக பயணம் மேற்கொள்ளவும் காலை 8.00 மணிக்கு கன்னியாகுமரி பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கி சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில், மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில், திருவட்டார் ஆதிகேசவன் கோவில், திற்பரப்பு மாஹாதேவர் கோயில் தரிசனம் செய்து திற்பரப்பு அருவியை சுற்றிப் பார்த்துவிட்டு மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி ரயில் நிலையத்திற்கும். மாலை 5.15 மணிக்கு கன்னியாகுமரி பேருந்து நிலையம் வந்தடையும் வகையில் பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தளங்களை இணைக்கும் வகையில் பேருந்து ஏற்பாடு செய்ய கோரிக்கை வைத்ததனடிப்படையில், சுற்றுலா பயணிகளின் வசதிக்காக கன்னியாகுமரி பேருந்து நிலையத்தில் காலை 8 மணிக்கு புறப்பட்டு. பத்மநாபபுரம் அரண்மனை, மாத்தூர் தொட்டி பாலம். திற்பரப்பு அருவி, பேச்சிப்பாறை சென்று சுற்றிப்பார்த்துவிட்டு மாலை 5 மணிக்கு கன்னியாகுமரி ரயில் நிலையத்திற்கும். 5.15 மணிக்கு கன்னியாகுமரி பேருந்து நிலையம் வந்தடையும் வகையில் பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆன்மீகம் மற்றும் சுற்றுலா பேருந்துகளில் நடத்துனரே வழிகாட்டியாக செயல்படுவார்கள். இவ்விரு சுற்றுலாக்களுக்கும் தலா ரூ.350 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே வெளிநாடு மற்றும் உள்நாடு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் இப்பேருந்து சேவைகளை பெற்று தங்கள் சுற்றுலாவினை மகிழ்ச்சியுடன் களித்திட கேட்டுக்கொள்கிறேன். இச்சேவையினை கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களுக்கும் சுற்றுலா பயணிகள் மற்றும் ஆன்மீகவாதிகள், பொதுமக்கள் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் பிரின்ஸ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், போக்குவரத்து கழக பொது மேலாளர் பாலசுப்பிரமணியம், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சிலதா, போக்குவரத்து கழக துணை மேலாளர் ஜெரோலின், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜன், மண்டல தலைவர்கள் ஜவஹர். அகஸ்தீனா கோகிலவாணி, இந்துசமய அறங்காவலர் குழு தலைவர் (சுசீந்திரம்) பிரபா ராமகிருஷ்ணன், நாகர்கோவில் மாநகராட்சி உறுப்பினர்கள் மோனிகா விமல், கௌசி. கலாராணி, முன்னாள் ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் சரவணன், பூதலிங்கம் பிள்ளை, துறை அலுவலர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ரூ.11.34 கோடி வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் அழகுமீனா நேரில் ஆய்வு



**கன்னியாகுமரி, மே 18–**

கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தோவாளை வட்டம் உடையடி பகுதியில் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் மூலம் புதிய வகுப்பறைகள். ஆய்வுக்கூடங்கள், கிராம அறிவு சார் மையம் உள்ளிட்டவைகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தாட்கோ மூலம் உடையடி ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியில் ரூ.1.63 கோடி மதிப்பில், 8 வகுப்பறையும், ரூ.18.60 லட்சம் மதிப்பீட்டில் தக்கலை ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியிலும், ரூ.21 லட்சம் மதிப்பில் பேச்சிப்பாறை பழங்குடியினர் பெண்கள் பள்ளி விடுதியிலும், ரூ.22.50 லட்சம் மதிப்பில் பத்துகாணி பழங்குடியினர் பெண்கள் பள்ளி விடுதியிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ரூ.1.59 லட்சம் மதிப்பில் மணலோடை பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் 4 வகுப்பறைகளும் 1 அறிவியல் ஆய்வு கூடமும். ரூ.2.62 கோடி மதிப்பில் பத்துகாணி பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகளும், 2 அறிவியல் சோதனை கூடங்களும், ரூ.55 லட்சம் மதிப்பில் கலிங்கராஜபுரம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 1 அறிவியல் ஆய்வுக்கூடமும், 5.2.59 கோடி மதிப்பில் வாழையத்துவயல் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகளும் 2 கழிவறைகளும், ரூ.77.89 லட்சம் மதிப்பில் ஆரல்வாய்மொழி கிராமத்தில் அறிவு சார் மையமும் கட்டப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து பேச்சிப்பாறை பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.8.40 லட்சம் மதிப்பில் பள்ளி தலைமை ஆசிரியர், காப்பாளி இல்லம் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ரூ.24.60 லட்சம் மதிப்பில் பூதப்பாண்டி ஆதிதிராவிடர் நல பெண்கள் விடுதியும், ரூ.42.55 லட்சம் மதிப்பில் மணலோடை பழங்குடியினர் பள்ளியில் ஆண்கள் விடுதி மறு சீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. ரூ.2.60 லட்சம் மதிப்பில் நாகர்கோவில் ஆதிதிராவிடர் நல கல்லூரியில் ஆண்கள் விடுதிகள் யூனிட் 1 மற்றும் யூனிட் 2 ல் கழிவறைகள் பணிகள் என மொத்தம் ரூ.11.34 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தோவாளை வட்டம் உடையடி ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியில் ரூ.1.63 கோடி மதிப்பில், 8 வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. மாணாக்கர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பணிகளை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்கள், ஒப்பந்தாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையம் 2025–2026 ஆம் கல்வி ஆண்டில் மாணவர், மாணவியர் சேர்க்கைக்கு முன்பாக முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு. விடுதிகள் தயார் நிலையில் இருக்க வேண்டுமென துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

ஆய்வில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மோகனா, துறை அலுவலர்கள், ஒப்பந்தாரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ஊடக செய்தியாளர்களுடன் ஆட்சியர் கலந்துரையாடல்




**கன்னியாகுமரி, மே 18–**

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், நான் முதல்வன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் அஸ்கார்டியா பவுண்டேஷன் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்களில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்கு மேலாக இந்த வேலைவாய்ப்பு முகாம் நடத்த பல்வேறு பணிகள் மேற்கொண்டு தற்போது தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் அதாவது நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக பல்வேறு முன்னணி நிறுவனங்கள் கலந்துகொள்ளும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமானது நான் முதல்வன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம். தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் அஸ்கார்டியா பவுண்டேஷன் இணைந்து நடத்தும் மாபெரும் சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

அதனடிப்படையில் இப்போது நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 40க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் கலந்துகொள்ள உள்ளன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் ஆனது தமிழ்நாட்டில் திருச்சி, சென்னை, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட நான்கு இடங்களில் தான் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தியுள்ளனர். நமது மாவட்டத்தில் குறைவான தொழில் நிறுவனங்கள் உள்ளதால் நான்முதல்வன் திட்டத்தின் வாயிலாக நாம் இந்த முகாம் நடத்துவதன் வாயிலாக நமது மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞர்கள் வெளி மாவட்டங்களில் உள்ள முன்னணி நிறுவனங்களில் பணிபுரியும் வாய்ப்பு உருவாகும். கல்லூரி படிப்பு படிக்கும்போதே கேம்பஸ் இன்டர்வியூ வாயிலாக முன்னணி நிறுவனங்களில் பணியில் சேர்வார்கள். இந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் 6500க்கும் மேற்பட்ட காலி பணியிடங்கள் உள்ளன. முகாமில் கலந்துகொள்ளும் நிறுவனங்கள் அனைத்தும் சென்னை சுற்றியுள்ள பகுதிகள். கோவை ஒரகடம். கிருஷ்ணகிரி, ஓசூர், திருச்சி மற்றும் பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ளன.

குறிப்பாக 2023, 2024, 2025ம் கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் படிப்புகள், இளங்கலை பொறியியல் (பி.இ) இளங்கலை தொழில்நுட்பம் (பி.டெக்), ஐ.டி.ஐ. தொழில்நுட்ப படிப்பு படித்தவர்கள். ஆசிரியர்படிப்பு படித்தவர்கள் உள்ளிட்டவர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. தொழில்நுட்ப கல்லூரி, பொறியியல். ஐ.டி.ஐ மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள். படித்து முடித்த மாணவர்களில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சான்றிதழ்கள் பெற்றுள்ள மாணவர்களுக்கு இவ்வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெறுவதற்கு மிகப்பெரிய வாய்ப்பு உள்ளது. 18 வயது முதல் 34 வயதுக்குட்பட்டவர்கள் இம்முகாமில் கலந்துகொள்ளலாம். இம்முகாமில் கலந்துகொண்டு வேலைவாய்ப்பு பெறும் அனைவரும் அந்நிறுவனத்தின் நிரந்தர பணியாளர்கள் ஆவார்கள்.

இந்த வேலைவாய்ப்பு முகாமினை பயனுள்ளதாக அமைத்திடும் வகையில் நாகர்கோவில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்துநிலையங்கள். கல்லூரிகள், ஆலயங்கள். கடலோர பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களிடையே வேலைவாய்ப்பு முகாம் குறித்து வாகன பிரச்சாரம், விளம்பர பதாகைகள், உள்ளூர் தொலைக்காட்சிகள், வானொலி வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பேருந்துகளில் கியூர் கோடு ஒட்டி விளம்பர செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முகாமில் கலந்துகொள்ளபவர்களுக்கு வடசேரி மற்றும் அண்ணா பேருந்துநிலையங்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. முகாமிற்கு கலந்து கொள்ளும் இளைஞர்களுக்கு நேர்காணல் நடைபெறும் பகுதிகள் குறித்த வழிகாட்டி பதாகைகள் வைக்கப்பதன் மூலம் காலவிரயம் தவிர்க்கப்படும். நடைபெறவுள்ள முகாமானது 24.05.2025 அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

மேலும் https://bit.ly/kkmjf2025 என்ற இணையத்தளத்தின் வாயிலாக முன்பதிவு செய்யதவர்களும், முன்பதிவு செய்யமால் வேலைவாய்ப்பு முகாமில் கலந்துக்கொள்பவர்கள் காலை 8:30 மணிக்கு நாகர்கோவில் பொன்ஜெஸ்லி கல்லூரியில் அன்றைய தினம் அமைக்கப்பட்டுள்ள பதிவு மையத்தில் பதிவுசெய்யவேண்டும். மேலும் விவரங்களுக்கு 7200722996, 9385614058, 8667511342 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்துகொள்ளலாம். இந்த வேலைவாய்ப்பு முகாமில் நமது மாவட்டம் மட்டுமல்லாது தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்தும் இளைஞர்கள் கலந்துகொள்ளலாம். படித்து வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்களின் வாயிலாக நடைபெறவுள்ள வேலைவாய்ப்பு முகாமினை 100 சதவீதம் பொதுமக்களுக்கு சென்றடைய ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஜாண் ஜெகத் பிறைட், உசூர் மேலாளர் (நிதியியல்) சுப்பிரமணியம், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) செல்வலெட் சுஷ்மா, வேலைவாய்ப்பு முகாம் ஒருங்கிணைப்பாளர் ராகுல் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.


## காரைக்கால் மாவட்ட அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை நவீனப்படுத்த வேண்டும் காமராஜர் மக்கள் கட்சி பொதுச்செயலாளர் கோரிக்கை




காரைக்கால், மே 18-

காரைக்கால் மாவட்ட அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை நவீனப்படுத்த வேண்டும். என காமராஜர் மக்கள் கட்சி பொதுச் செயலாளர் ஏ எம். இஸ்மாயில் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைக்கால் மாவட்ட காமராஜர் மக்கள் கட்சி பொதுச் செயலாளர் எடிட்டர் ஏ ம். இஸ்மாயில் இதுகுறித்து, மாவட்ட கலெக்டர் மற்றும் புதுச்சேரி அரசுக்கு வெளியிட்டுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: காரைக்கால் அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையம் 2018ம் ஆண்டு ஜனவரி மாதம், தபால் நிலைய அலுவலகத்தின் ஒரு பகுதியில் துவங்கப்பட்டது. இந்த 7 ஆண்டுகளில் எவ்வித விரிவாக்கமும் இல்லாமல் அந்த சிறிய பகுதியிலேயே செயல்பட்டு வருகிறது. கடவுச்சீட்டுக்கு விண்ணபித்தவர் மட்டுமே உள்ளே செல்ல வேண்டும். துணைக்கு செல்பவர்கள் வாசலிலேயே நிற்க வேண்டும். அங்கு அமருவதற்கு எவ்வித வசதியும் கிடையாது. குடிநீர் வசதிக்கூட கிடையாது. அலுவலகத்திற்கான பெயர் பலகை கூட இல்லாத அவல நிலை. அலுவலகம் உள்ளே செல்லப் பல தடைகளை கடந்து செல்ல வேண்டும். அஞ்சலக அலுவலகம் வருபவர்கள் பாதை முழுவதும்



வாகனங்களை நிறுத்தி செல்வதால் பொதுமக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர். வாகன நிறுத்தம் இருக்கும் இடத்தை குறிக்கும் பெயர் பலகையும் கிடையாது.

ஒரு காலத்தில் அரசியல் நிர்வாகத்திற்காக காரைக்கால் தஞ்சை ஜில்லாவுடன் இணைந்து இருந்த அதன் தாக்கமோ என்னவோ, "பொதுமருத்துவமனைக்கு சென்றால், இங்கு ஒரு வசதியும் கிடையாது மேல் சிகிச்சைக்கு தஞ்சைக்கு அனுப்புகிறார்கள், பாஸ்போர்ட் அலுவலகத்திலும் பெரும்பாலானவர்களை தஞ்சைக்கே அனுப்புகிறார்கள். கேட்டால் " உயர் அதிகாரி இங்கு இல்லை என்பது பதிலாக இருக்கிறது. எனவே அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை விரிவாக்கம் செய்யும் வகையில், "அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையம் பெயர் பலகை வைக்க வேண்டும். பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள் அலுவலகம் செல்ல வழிவசதியை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். துணைக்கு வருபவர்கள் வெளியில் அமருவதற்கு வசதியும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப நவீனப்படுத்த வேண்டும், இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடையாள தேசியக் கொடி பேரணி



காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுத்த இந்திய ராணுவ வீரர்களை பாராட்டும் வகையில், புதுச்சேரி பா ஜனதா சார்பில், துணைத்தலைவர் ராஜசேகரன் தலைமையில், நேற்று மாலை புதிய பஸ் நிலையம் அருகே அடையாள தேசியக் கொடி பேரணி நடைபெற்றது.

# ஆழியாறு பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதி நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு

கோவை, மே 18-

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், ஆழியாறு பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளுக்குட்பட்ட நிலங்களுக்கு, முதல்போக பாசனத்திற்காக தண்ணீரினை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை பரம்பிக்குளம் கோட்ட செயற்பொறியாளர் டிசிவகுமார், சமமட்ட கால்வாய் உபகோட்ட உதவி பொறியாளர் சிங்காரவேல், ஆழியார் அணை உதவி பொறியாளர் கார்த்திக் கோகுல், வட்டாட்சியர் ராஜேந்திரன், பாசன சபை தலைவர்கள் வித்யாசாகர், லோகநாதன், ஆறுச்சாமி மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பவன்குமார் க.கிரியப்பனவர் தெரிவித்ததாவது, கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், ஆழியாறு பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று நேற்று தமிழ்நாடு முதலமைச்சரால் ஆழியாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, இப்பகுதிகளுக்குட்பட்ட நிலங்களுக்கு முதல்போக பாசனத்திற்காக 16.05.2025 முதல் 15.10.2025 முடிய, ஆழியாறு அணையிலிருந்து தொடர்ந்து 152 நாட்களுக்கு 1205 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட இதன் மூலம் ஆனைமலை வட்டத்திலுள்ள 6400 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும். விவசாயிகள் இந்த தண்ணீர் விவசாயத்திற்காக நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். ஆழியார் அணையின் தற்போதைய நீர்மட்டம் 74.70 அடியாக உள்ளது. 152 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட போதுமானளவு தண்ணீர் அணையில் இருப்பு உள்ளது.

பள்ளிவிளங்கால் வாய்க்கால் மூலம் 656.06 ஏக்கர் பாசன பரப்பும், அரியாபுரம் வாய்க்கால் மூலம் 1245.72 ஏக்கர் பாசன பரப்பும், காரப்பட்டி வாய்க்கால் மூலம் 781.62 ஏக்கர் பாசன பரப்பும், பெரியணை வாய்க்கால் மூலம் 1902.79 ஏக்கர் பாசன பரப்பும், வடக்கலூர் வாய்க்கால் மூலம் 1780.07 ஏக்கர் பாசன பரப்பும் என மொத்தம் 5 வாய்க்கால்கள் மூலம் 6400 ஏக்கர் பாசன பரப்பு விவசாய நிலங்கள் பயனடைகின்றன. என தெரிவித்தார்.

# வேலூர் மாவட்டத்தில் ரூ.98.63 கோடி மதிப்பில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது - ஆட்சியர் தகவல்

வேலூர், மே 18-

வேலூர் மாவட்டத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை ரூபாய் 98.63 கோடி மதிப்பில் 263.67 கிலோமீட்டர் நீளத்திற்கு 216 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், பீஞ் சமந்தை ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தொங்குமலை முதல் தேக்குமரத்துர் வரை 1.50 கி.மீ நீளத்திற்கு ரூபாய் 55.13 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய தார் சாலை மற்றும் தொங்குமலை ஆலமரம் முதல் நாயக்கனூர் வரை 2.80 கி.மீ நீளத்திற்கு ரூபாய் 98.65 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய தார் சாலை ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி திறந்து வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவத்த்தாவது, ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல், பராமரித்தல் மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆகிய பணிகளை முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தி மாநிலம் முழுவதும் 202223 மற்றும் 2023 – 24 ஆகிய ஆண்டுகளில் 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் மேம்பாடு செய்ய ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்தார்கள்.

தொடர்ந்து 2024–25 மற்றும் 2025–26 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மேலும் 10,000 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்.





இத்திட்டத்தில் பேருந்துகள் செல்லும் சாலைகள், ஒற்றை இணைப்பு கொண்ட குக்கிராமங்கள், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளை இணைக்கும் சாலைகள், முக்கிய சுற்றுலா தலங்கள், புனித தலங்கள் மற்றும் பாரம்பரிய இடங்கள், சமூக பொருளாதார முக்கியத்துவமுள்ள இடங்களை இணைக்கும் சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளாக தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மாவட்டத்தின் முக்கிய சாலைகளுடன் இணைப்பு சாலைகள் இணையும் இடத்தில் சாலைகளுக்கான சந்திப்பு மேம்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் விபத்து நடக்கும் இடங்கள், கரும்புள்ளி பகுதிகள், பாதுகாப்பற்ற புவியமைப்பு கொண்ட சாலைகளில் வேகத்தடைகள், பாதுகாப்புத் தடைகள் பிரதிபலிப்பு குறியீடுகள் உள்ளிட்ட சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பீஞ்சமந்தை ஊராட்சியில் உள்ள தொங்குமலை முதல் தேக்குமரத்துர் வரை 1.50 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூபாய் 55.13 இலட்சம் மதிப்பிலும், தொங்குமலை ஆலமரம் முதல் நாயக்கனூர் வரை 2.8 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூபாய் 98.65 இலட்சம் மதிப்பிலும் அமைக்கப்பட்டுள்ள புதிய தார்சாலைகள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பொதுமக்களின்

வேலூர் மாவட்டத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 2022–23 முதல் 2024–25 வரை 3 ஆண்டுகளில் ரூ.98.63 கோடி மதிப்பில் 263.67 கி.மீ நீளத்திற்கு 216 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி தெரிவித்தார்.

வேலூர் மாவட்டத்தில் முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022 முதல் 2025 வரை அமைக்கப்பட்டுள்ள

இச்செய்தியாளர் சந்திப்பின்போது உடன் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ. பி. நந்தகுமார், மாவட்ட வன அலுவலர் அசோக்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீ. செந்தில்குமரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு. பாபு, ஒன்றியக்குழுத் தலைவர் சி.பாஸ்கரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● ஞாயிறு ● மே 18, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# அனைத்து துறை உயர் அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்



**தென்காசி, மே 18–**

தென்காசி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்து துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் சங்கர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,20,000 மதிப்பிலான மின்கலம் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் மாவட்ட மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் வழங்கினார்கள்.

பின்னர்மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு எண்ணற்ற நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சரால், மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்திடவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணித்திடவும், இயற்கை பேரிடர் காலங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிடவும், பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக, மாவட்ட கண்காணிப்பு அலுவலராக நியமனம் செயதுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்து துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர்ன் மக்களுடன் முதல்வர் முதலமைச்சரின் முகவரி, பட்டா மாற்றம், உங்களைத்தேடி உங்கள் ஊரில், முகாம்களில் பொதுமக்களிடமிருந்து பதிவு செய்யப்பட்டுள்ள கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவது குறித்தும், புதுமைப்பெண் திட்டம் குறித்தும், போதை தடுப்பு விழிப்புணர்வு குறித்தும், பெண்கள் பாதுகாப்பு குறித்தும், பழைய வீடுகளை புதுப்பித்துத்தரும் திட்டம் குறித்தும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் குறித்தும், சாலை வசதி, குடிநீர் வசதி குறித்தும், நமக்கு நாமே திட்டம் குறித்தும், ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் விடுதிகள் குறித்தும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள மாணாக்கர்களின் விபரங்கள் குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ஊரகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் செயல்பாடுகள் மற்றும் விநியோகம் செய்வது குறித்தும், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மிதிவண்டிகள் விநியோகிக்கப்பட்டு வருதல் குறித்தும் மற்றும் பள்ளிக்கல்வித்துறையில் மாணாக்கர்களின் பள்ளி சேர்க்கைகள் குறித்தும் நான்முதல்வன் உயர்வுக்கு படி திட்டம் குறித்தும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் குறித்தும், கூட்டுறவுத்துறையின் மூலம் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் கடன்கள் குறித்தும், சிறு, குறு தொழில்முனை வோரர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குற்றாலம் பேரூராட்சியில் 2024–2025 ஆம் நிதி ஆண்டின் கீழ் ரூ.234 லட்சம் மதிப்பீட்டில் புணரமைத்து கட்டப்பட்டு வரும் மெயின் அருவி குடியிருப்பு கட்டிடங்களையும், ரூ.123 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்து கட்டப்பட்டு வரும் பிரதான அருவி குடியிருப்பு கட்டிட பணிகளையும், வல்லம் செம்புலி கால்வாயில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளையும், செங்கோட்டை கலங்காத கண்டி கால்வாயிலில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளையும், கற்குடி மேல எரவேபது குளத்தில் ரூ.2.60 லட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகளையும், கீழ எரவேபது குளம் தொட்டியில் ரூ.1.04 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளையும், புளியரை ஊராட்சி பள்ளியில் ரூ.67 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டு வரும் 4 கூடுதல் வகுப்பறை கட்டிட கட்டுமானப் பணிகளையும், கிளாங்காடு பாலமார்த்தாண்டபுரத்தில் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையக் கட்டிட பணிகளையும், குலையநேரியில் ஙிஞ்றிகி பந்தல் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.60,000 மானியத்தில் பந்தல் அமைக்கும் பணிகளையும், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் 2021–2022 ஆம் நிதி ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மையம் மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டிடங்களையும், தென்காசி தாலுகா அலுவலகத்தில் நடைபெற்று வரும் வருவாய்த் தீர்வாயம் (ஜமா பந்தி) குறித்தும் பார்வையிட்டு ஆய்வு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

எனவே, தமிழக அரசின் இதுபோன்ற திட்டங்களை, பொதுமக்களிடம் முறையாக கொண்டு சேர்த்து அவர்கள் பயனடையும் வகையில், அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஒன்றிணைந்து செயல்பட்டு, தென்காசி மாவட்டத்தை வளர்ச்சி மிக்க மாவட்டமாக மாற்றிட வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுப்புலெட்சுமி மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்






**கடலூர், மே 18–**

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் குறிஞ்சிப்பாடி வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வளாகத்தில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியதிற்குட்பட்ட 5 ஊராட்சிகளுக்கு தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் தலா ரூ.2,08,500 வீதம் மொத்தம் ரூ.10,42,500 மதிப்பீட்டிலான குப்பை சேகரிக்கும் வாகனங்களை வழங்கினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் வளர்ச்சிக்காகவும் மேன்மைக்காகவும் ஏராளமான திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து பகுதிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத் திடவும், அரசால் செயல்படும் திட்டங்களின் பயன்கள் தகுதியுள்ள அனைவருக்கும் கிடைத்திட வேண்டும் என்பதற்காகவும் எண்ணற்ற உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, வடலூர் நகராட்சி, பொதுப்பணித் துறை கட்டடம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை, தாட்கோ, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம். கூட்டுறவுத் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறை சார்ந்த அலுவலர்களுடன் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட பகுதிகளில் மேற் கொள்ளப்படும் திட்டப்பணிகளின் நிலை குறித்து இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வேளாண்மை தொழில் சார்பில் தேவையான இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்திட வேண்டும். விவசாயி களின் உற்பத்திப் பொருட்களை பாதுகாப்புடன் வைத்திடவும், சரியான விலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்திடவும், மாவட்டத்தில் உள்ள 6 உழவர் சந்தைகளை சிறப்பாக செயல்படுத்தி, விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை நேரடியாக பொதுமக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வேளாண் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட நெல் அறிவடை இயந்திரங்களை முழு அளவில் குறைந்த வாடகைக்கு வழங்கிட வேண்டும்.

நீர்வளத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாய்க்கால்கள் தூர்வாரும் பணி, நடுபரவனாற்றில் தடுப்புச்சுவர் கட்டும் பணி, சொக்கன்கொல்லை வடிகாலில் ஒழுங்கியம் மறுகட்டுமான பணி, பெருமாள் ஏரி தூர்வாரும்பணி, அருவாள்மூக்கு கடைமடையில் ஒழுங்கியம் அமைக்கும் பணி, விருதாச்சலம்–சேலம் நெடுஞ்சாலை அமைக்கும் பணியின் தற்போதைய நிலை, நகர் பகுதியில் ஏற்படுத்தப்பட்டு வரும் மேம்பால பணிகளின் நிலைக் குறித்தும் கேட்டறியப்பட்டது.

வடலூர் பேருந்து நிலையம் கட்டுமான பணிகள் 95% முடிவு பெற்று பயன்பாட்டிற்கு திறக்கப்படும் நிலையில் உள்ளது. எரிவாயு தகன மேடை பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. நகராட்சி பகுதிகளில் கட்டடப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமானப் பணிகள், சாலைகளில் வண்ணக்கற்கள் பதிக்கும் பணிகள், சாலை அமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றது. பேரூராட்சி பகுதியில் 86 பணிகளில் 64 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

தாட்கோ மூலம் இதுவரை 23 பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் மூலம் 340 பயனாளி களுக்கு ரூ.26.30 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் வழங்கப்பட உள்ளது. நியாயவிலைக் கடைகள் கட்டடப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது. கோடைகாலம் என்பதால் சீரான மின் அழுத்தத்துடன் கூடிய மின்விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், மின்தடை ஏற்படாமல் மின்விநியோகம் செய்திட புதிய மின் வழித்தடம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகளை அமைத்துதரும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் இதுவரை கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் நிலை, வெவ்வேறு நிலைகளிலுள்ள வீடு கட்டுமானப் பணிகளின் நிலை, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுமானத்தொகை குறித்தும், மேலும் தெரு மின்விளக்குகள், கிராம சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைக்கும் பணி, வீடுகள் பழுதுபார்க்கும் பணி, பல்வேறு திட்டங்களின் கீழ் எடுத்துள்ள பணிகள், முடிவுற்ற பனிகள், நிலுவை பணிகளின் நிலை குறித்தும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட பயனாளிகள், பட்டா வேண்டி நிலுவையிலுள்ள மற்றும் பெறப்பட்ட மனுக்களின் நிலை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிஞ்சிப்பாடியில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம் அமைய உள்ளது. பூவாணிக்குப்பம் பகுதியில் பெரியார் நினைவு சமத்துவபுரம் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. ரெங்கநாதபுரம் ஊராட்சியில் மேட்டுவெளி பகுதியில் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு ரூ.8.3 கோடி மதிப்பீட்டில் 166 வீடுகளுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து திட்டப் பணிகளையும் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், தகுதியுள்ள பயனாளிகள் யாரையும் விடுபடால் அரசின் நலத்திட்ட உதவிகள் அனைவருக்கும் கொண்டு சேர்த்திட அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



**நாமக்கல், மே 18–**

நாமக்கல் மாநகராட்சி, சேந்தமங்கலம், எருமப்பட்டி, புதுச்சத்திரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நாமக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆசியா மரியம், மாவட்ட ஆட்சித்தலைவர் உமா முன்னிலையில் ரூ.17.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாநகராட்சி, சின்ன முதலப்பட்டியில் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், ரூ.4 கோடி மதிப்பீட்டில் திருச்செங்கோடு சாலையில் புதியதாக வணிக வளாகம் கட்டும் பணி, நீர்வளத்துறை சார்பில், சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் பிடாரிப்பட்டி பாண்டியன் அணைக்கட்டு முதல் தோட்டக்கூர்பட்டி அணைக்கட்டு வரை வரட்டாறு தூர்வாரும் பணி நடைபெற்று வருவதையும், ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் தூசூர் ஏரி தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதையும், எருமப்பட்டி பேரூராட்சியில் ரூ.7.47 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருவதையும், ரூ.18 லட்சம் மதிப்பில் பசுமை பரப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளதையும், முத்துக்காப்பட்டியில் ரூ.2.38 லட்சம் மதிப்பீட்டில் விவசாயி பாலகுமார் சூரிய சக்தி மின் மோட்டார் அமைத்துள்ளதையும், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், போடிநாயக்கன்பட்டியில் ரூ.1.91 லட்சம் மதிப்பீட்டில் துளிநீரில் அதிக பயிர் திட்டத்தின் கீழ் மரவள்ளி கிழங்கு பயிர் சாகுபடி செய்துள்ளதையும் பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் பெரியகுளம் கால்வாய் தூர்வாரப்பட்டு வருவதையும், ரூ.22.94 லட்சம் மதிப்பில் ச.நாட்டாமங்கலத்தில் ஏரியில் புதிய குளம் அமைக்கப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு, சேந்தமங்கலம் பகுதியில் ஆட்சேபனையற்ற குடியிருப்புகளில் வசித்து வரும் பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ச. நாட்டாமங்கலத்தில் ரூ.22.60 லட்சம் மதிப்பீட்டில் பண்ணை குட்டை அமைக்கப்பட்டுள்ளதையும், ரூ.20.65 லட்சம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க கட்டடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணி முடிவடையும் காலம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். வினைத்தீர்த்தபுரத்தில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, வினைத்தீர்த்தபுரம் ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவ பிரிவில் மூலிகைகள் கொண்டு மருந்து பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளதையும், அவற்றின் தன்மை, எத்தகைய நோய்களுக்கு எவ்வித மருந்துகள் வழங்கப்படுகிறது, சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் விபரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

புதுச்சத்திரத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர்.ப.சுப்பராயனுக்கு அரங்கம் அமைக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு பணியின் தற்போதைய நிலை குறித்து நாமக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், சிறுபான்மையினர் நல ஆணையர் ஆசியா மரியம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வடிவேல், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராமசந்திரன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாரல் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சாதனை



**புதுச்சேரி, மே 18–**

புதுச்சேரி வில்லியனூர் கோர்க்காடு பகுதியில் இயங்கி வரும் மாரல் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பதினொன்றாம் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் சிறந்த முறையில் தேர்ச்சிபெற்று சாதனை படைத்துள்ளனர். மேலும் தேர்வு எழுதிய அனைத்து மாணவ, மாணவிகளும் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றுள்ளனர். பதினொன்றாம் வகுப்பு மாணவி ஜெய ஸ்வேதா 600க்கு 510 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடத்தையும், பத்தாம் வகுப்பு மாணவர் கிரிதரன் 500க்கு 460 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடத்தையும் பிடித்துள்ளனர். மாணவி சுஷ்மிதா 442 மதிப்பெண்கள் பெற்று பத்தாம் இரண்டாம் இடத்தையும், திவ்யஸ் 434 மதிப்பெண்கள் பெற்று மூன்றாவது இடத்தையும், சிறில் ரேமண்ட் 430 மதிப்பெண்கள் பெற்று நான்காவது இடத்தையும் பிடித்துள்ளனர். மேலும் சந்திரமோகன், பரணிதரன், நித்யஸ்ரீ, ஷேக் கமல் பாட்ஷா, ஐஸ்வர்ய லட்சுமி ஆகிய மாணவர்கள் 400 மதிப்பெண்களுக்குமேல் பெற்று தேர்வில் வெற்றிபெற்றுள்ளனர். தேர்வில் அதிக மதிப்பெண்களை எடுத்த மாணவ, மாணவிகளையும் அவர்களது பெற்றோர்களையும் பள்ளியின் தாளாளர் ராஜேந்திரன், பள்ளியின் முதல்வர் ரத்தின பிரியா சால்வை அணிவித்து கௌரவித்தனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# ஐதராபாத்தில் பயங்கர தீ விபத்து 17 பேர் உடல் கருகி பலி

# பாகிஸ்தானுக்கு உளவாளியாக மாறிய பெண் யூடியூபர் உட்பட 6 பேர் கைது



# பி.எஸ்.எல்.வி. சி61 ராக்கெட் திட்டம் தோல்வி


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 18-5-2025 ஞாயிற்றுக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்